# தாள் 1. ஆய்வியல் நெறிகளும் தமிழ் ஆராய்ச்சி வரலாறும்

Research Methodology and History of Tamil Research

**(22MPTAM1)**

**நோக்கம்**

- ஆராய்ச்சி முறைகள் (Research Methods) பற்றிய சிந்தனைகளை விளக்குதல்.
- தமிழ் இலக்கிய இலக்கண மரபில் காணப்படும் ஆராய்ச்சி முறைகளை இனங்காணல்.
- ஆராய்ச்சி நெறிமுறைகளை விளக்கி, அவற்றைத் தமிழ் இலக்கிய, இலக்கண ஆய்வுகளுக்குப் பொருத்திக் காட்டுதல்.
- அறிவியல், சமூகவியல் போன்ற துறைகளில் காணப்படும் ஆராய்ச்சி நெறிமுறைகளைத் தமிழ் ஆராய்ச்சியோடு பொருத்திப் பார்த்தல் - ஆகியவற்றின் மூலம் இலக்கிய, இலக்கண ஆராய்ச்சிகளுக்குரிய புதிய பார்வைகளை உருவாக்க முனைதல்.

**பாடத்திட்ட அமைப்பு**

- ஆய்வியல் நெறிமுறைகளின் படியும் தமிழ் ஆராய்ச்சி வரலாற்று அடிப்படையிலும் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அலகு *1.*** ஆய்வும் ஆய்பொருளும்: ஆய்வு - சொல்லும் பொருளும் - வரையறை - ஆய்வு நாகரிகம் - ஆய்வுப் பயன் - ஆய்வு முடிவுகள் - ஆய்வு மதிப்புகள் - அறிவாராய்ச்சி விளக்கம் - ஆய்வேடு என்பதன் விளக்கம் - ஆய்வுச் சிக்கல்கள் - ஆய்வுச் சிக்கலை இனங்காணலும் பகுத்துணர்தலும் - ஆய்வுச் சிக்கலை மையமிட்ட தலைப்பினைத் தெரிதல் - ஆய்வின் எல்லை.

**குறியிலக்குகள் (Objectives)**

1. ஆராய்ச்சி குறித்த வரைவிலக்கணம் (Research Definition), ஆய்வு நெறிமுறையியல் (Research Methodology) ஆகியன பற்றிக் கற்றுணர்வர்.
2. ஆய்வுப்பொருள் பற்றிய அறிதிறனை வளர்த்துக் கொள்வர்.
3. இலக்கிய ஆய்வில் அறிவியல் நெறியின் தேவையையும் பயன்பாட்டையும் பற்றி அறிந்து கொள்வர்.
4. புகழ்பெற்ற ஆய்வுகளை அறிந்து ஆய்வுத் திறனை வளர்த்துக் கொள்வர்.
5. ஆய்வுநெறித் திட்டங்களை (Research Design) விளங்கிக் கொள்வர்.
6. ஆய்வின் தன்மையையும் நோக்கத்தையும் (Nature and objectives of Study) கற்றுணர்வர்.
7. ஆய்வுக்கட்டுரை, விளக்கக் கட்டுரை (Dissertation), ஆய்வேடு (Thesis) ஆகியவற்றிடையேயுள்ள வேறுபாட்டை அறிந்து கொள்வர்.
8. ஆய்வுப் பொருளின் வரையறை எது என்பதை விளக்கும் ஆய்வு எல்லையினை (Dimension of Study) உணர்வர்.
9. ஆய்வுச் சிக்கலை (Research Problems) ஆராய்ந்து அதற்கு ஆய்வில் தீர்வுகாணும் திறனைப் பெறுவர்.

**அலகு *2.*** கருதுகோளும் அணுகுமுறையும் : கருதுகோளின் இலக்கணமும் வகைப்பாடும் - ஆய்வில் கருதுகோள் பெறும் இடம் - நிலைபெறும் கருதுகோள் - கருதுகோள் புலப்படுதல் - கருதுகோட்போலி - முதன்மை ஆதாரங்கள் - துணைமை ஆதாரங்கள் - ஆய்வு அணுகுமுறைகள்; தூய ஆய்வு - பயன்பாட்டு முறை ஆய்வு - ஒப்பியல் ஆய்வு - சமூகவியல் ஆய்வு - உளவியல் ஆய்வு - அறிவியல் ஆய்வு - செய்முறை ஆய்வு - சோதனை ஆய்வுப்படிமுறை - தருக்கமுறை அல்லது அளவைமுறை - வரலாற்றியல் ஆய்வுமுறை - தனிநிலை ஆய்வு வரலாறு - அளந்தறிமுறை - புள்ளி விவர ஆய்வுமுறை.

**குறியிலக்குகள் (Objectives)**

1. தரவுகளின் அடிப்படையில் ஒரு தற்காலிகத் தீர்வை அமைத்துக்கொள்ளும் (Formulation of tentative Solution) முறைமையைக் கற்றுணர்வர்.
2. கருதுகோளின் தேவை, கருதுகோளின் தகுதிகள் பற்றி அறிந்து கொள்வர்.
3. கருதுகோளின் இலக்கணம், ஆய்வில் கருதுகோள் பெறும் இடம் குறித்து அறிவர்.
4. கருதுகோள் உருவாக்கம், கருதுகோளின் வகைகள் குறித்து அறிந்துணர்வர்.
5. ஆய்வுப் பொருளுக்கேற்பவும் துறைக்கேற்பவும் மேற்கொள்ளுதற்குரிய முறைமைகளைக் கற்றறிவர்.
6. ஒப்பாய்வு முறை (Comparative Research Method), ஒப்பிலக்கிய ஆய்வு முறைகளை விளங்கிக் கொள்வர்.
7. உளவியல் ஆய்வு முறையினைக் கற்று இலக்கியங்களில் காணலாகும் உளவியலை எடுத்துரைக்கும் திறனைப் பெறுவர்.
8. அறிவியல் ஆய்வுமுறை (Scientific Research), அறிவியல் ஆய்வின் சிறப்புக் கூறுகள், சோதனை ஆய்வுமுறை (Experimental Method) அதன் பண்புகள் ஆகியவற்றைக் கற்றறிவர்.
9. வரலாற்று முறை ஆய்வினைக் (Historical Method of Research) கற்று இலக்கியம், இலக்கணம், களஆய்வு மூலம் வரலாற்றை ஆராய்ந்து இயம்பும் ஆற்றலைப் பெறுவர்.
10. அளந்தறி ஆய்வு முறை (Survey Research), புள்ளி விவர ஆய்வுமுறைகளைக் (Statistical Method) கற்றுணர்வர்.

**அலகு 3.** தரவுத் தொகுப்பும் ஆய்வேட்டின் அமைப்பும் **:** சான்று மூலம், தரவுத்தொகுப்பு முயற்சிகள் - நூலகம், மின்னணுக் கருவிகள் - களப்பணி - விளக்கம் - களப்பணியின் தேவை - திட்டமிடல் - கருவிகள் - காலம், பொழுது - சேகரிக்கும் இடம் - சூழல் - தகவலாளி அணுகுமுறை - நேர்காணல் - வினாநிரல் - வாய்மொழி மரபுச் செய்திகள் - தகவல் திரட்டுதல் - வகைப்பாடு - ஆய்வேட்டு அமைப்பியல் - ஆய்வுப்பொருள் அடைவும் இயற்கைப் பாகுபாடும் - முன்னுரை - சுருக்கக் குறியீட்டு விளக்கம் - இயல் அமைப்பு இயல்களின் வைப்புமுறை - நடைச்செம்மை - பிறன்கோட் கூறல் - உடன்படல் - மறுத்தல் - மேற்கோள் காட்டும் நெறிகள் - அடிக்குறிப்பிடும் முறைமைகள் - துணைநூற்பட்டியல் - பின்னிணைப்புகள் - ஆய்வேட்டின் தரம்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. ஆய்விற்கான முதன்மைச் சான்றுகள் (Primary Sources) துணைமைச் சான்றுகள் (Secondary Sources) பற்றி அறிவர்.
2. ஆய்விற்குத் தேவையான தரவுகளைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படைகள் (Bases for Selecting the data), தரவுகளைத் திரட்டல் (Gathering Data), திரட்டிய தரவுகளை ஒழுங்கு படுத்துதல் ஆகியவற்றை அறிந்து தம் ஆய்வில் பயன்படுத்தும் திறனைப் பெறுவர்.
3. நூலகம், நூலக வரலாறு, நூலகப்பயன், நூலகப் பயன்பாடு, மின்னணுக் கருவிகளின் பயன்பாடு ஆகியவை ஆய்விற்கு இன்றியமையாதவை என்பதை அறிந்து கொள்வர்.
4. களஆய்வு (Field Study) வரைவிலக்கணம் (Defination), களஆய்வு செய்வோர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆய்பவரின் நோக்கு, திட்டமிடுதல், களத்தொடர்புகள், ஆய்வுமுறைகள், நேர்காணல் ஆகியன குறித்து ஒரு தெளிவான மதிப்பீடு செய்யும் ஆற்றலைப் பெறுவர்.
5. நேர்காணல் (Interview) உத்திகள், பயன், வகைகள் பற்றி அறிந்து, அவை குறித்த, ஒரு தெளிவான மதிப்பீடு செய்யும் ஆற்றலைப் பெறுவர்.
6. வினாநிரல் (Questionnaire), வினாநிரல் - பட்டியல் வேறுபாடு, வினாநிரலின் சிறப்புக் கூறுகள், வினாநிரலின் வகைகள் ஆகியவற்றைக் கற்றுணர்வர்.

7. ஆய்வேட்டின் கட்டமைப்பு, தரவை ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல், எவருக்கு எழுதுதல், ஆய்வேட்டின் பயன், முடிவுகளைத் தெரிவித்தல், கடைப்பிடித்த ஆய்வுமுறை, தரவுகளின் ஒழுங்கு, இயல் பிரித்தல், பின்னிணைப்புகளை முடிவு செய்தல், ஆய்வேட்டின் அகக்கட்டமைப்பு, புறக்கட்டமைப்பு ஆகியவற்றை எங்ஙனம் அமைக்க வேண்டுமென்பதைக் கற்றுணர்வர்.
8. ஆய்வேடுகளில் பின்பற்றப்படும் மேற்கோள் நெறிமுறைகளை விளங்கிக் கொள்வர்.
9. ஆய்வில் மேற்கொள்ளப்படும் அடிக்குறிப்பு, அடிக்குறிப்பிடும் முறைமைகள் அடிக்குறிப்பின் வகைகள் பற்றி ஆய்வாளர்கள் அறிந்து கொள்வர்.
10. ஆய்விற்குப் பயன்பட்ட நூல்களை வரிசைப்படுத்தித் துணைநூற்பட்டியல் உருவாக்குதல், பின்னிணைப்பு அளித்தல் முறைகளைக் கற்றுத் தம் ஆய்வேடுகளில் அவற்றைப் பயன்படுத்தும் திறனைப் பெறுவர்.

**அலகு 4.** தமிழாய்வின் பொதுப் போக்குகள் **:** தமிழ் மரபில் ஆராய்ச்சி - ஆராய்ச்சி - திறனாய்வு உறவும் உறழ்வும் - பண்டைத்தமிழ் இலக்கண இலக்கியங்களும் திறனாய்வும் - தொல்காப்பியம் - தொகை நூல்கள் - புலவரைப் போற்றல் - பாயிரங்கள் - பதிகங்கள் - திருவள்ளுவ மாலை - பக்தி இலக்கியத் தொகுப்பு - சமயம் சார் மொழியும் உரைகளும் - இலக்கிய உரைகள் - நிகண்டுகள் - இறையனார் அகப்பொருள் உரை - தொல்காப்பிய உரைகள் - பிற உரைகள் - மரபு வழித் தமிழ்க் கல்வி - நவீனத் தமிழ்க் கல்வி - நவீன ஆய்வின் தோற்றம் - ஐரோப்பிய அறிஞர்களின் பங்களிப்பு - மேலை ஆய்வியல் செல்வாக்கு - கல்வியாளர் ஆய்வுகள் - பல்துறை இயைந்த ஆய்வுகள் - இலக்கிய, மொழி, பண்பாட்டு ஆய்வுகள் கண்ட புதுத் தெளிவுகள்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. தமிழ் ஆராய்ச்சி வரலாற்றினைக் கற்றுணர்வர்.
2. திறனாய்வுக்கான விளக்கத்தையும், திறனாய்வு வகைகளையும் அறிவர்.
3. தொல்காப்பியத்தில் உள்ள ஆராய்ச்சி முறைமைகளை அறிந்து கொள்வர்.
4. படைப்பிலக்கியத்திற்கும் ஆராய்ச்சிக்கும் உள்ள வேறுபாட்டினைப் புரிந்து கொள்வர்.
5. சங்கப் பாக்களை வகை தொகை செய்தமைக்கான காரண காரியங்களைக் கண்டறியும் ஆற்றலைப் பெறுவர்.
6. பண்டைத்தமிழ்ப் புலவர்களின் பாடல்கள் வழி அவர்களின் திறனாய்வுத் திறனைக் கற்றறிவர்.
7. உரையாசிரியர்களின் ஆய்வுத் திறனைக் கற்றுணர்வர்.
8. மேலை நாட்டு முறையில் எழுந்த ஆராய்ச்சிப் போக்கை அறிந்து கொள்வர்.
9. ஆங்கிலத்தில் தமிழராய்ச்சி செய்த தமிழராய்ச்சியாளர்களை அறிவர்; அவர்களின் ஆராய்ச்சித் திறன்களைக் கற்றுணர்வர்.
10. ஒப்பிலக்கண, ஒப்பிலக்கிய ஆராய்ச்சிகளைக் கற்று, ஒப்பியல் ஆய்வுத் திறன் பெறுவர்.

**அலகு 5.** இலக்கிய இலக்கண ஆய்வுப் போக்குகள் **:** சங்க இலக்கிய ஆய்வுகள் - சங்கம் மருவிய கால இலக்கிய ஆய்வுகள் - பதிப்பு வரலாறு - தமிழ்ப் பண்பாட்டின் மீள் கண்டெடுப்பு - அறிமுகங்கள் - சுவை தரு விளக்கங்கள் - உள்ளடக்க ஆய்வுகள் - முதல், கரு, உரி, திணை, துறை, கூற்று, சங்க காலச் சமுதாயம் - கால ஆய்வுகள் - நடையியல், கட்டமைப்பு, பெண்ணியம், தலித்தியம், செவ்வியல் அடிப்படையிலான ஆய்வுகள் - பதினெண்கீழ்க்கணக்கு - பதிப்புகள் - திருக்குறள் ஆய்வுகள் - கருத்து - காலம் - சமயச்சார்பு - அழகியல் - பிற அற, அக, புற நூல்களின் உருவம் - உள்ளடக்கம் - உத்தி - காலம் - பக்தி இலக்கியங்கள் - காப்பியங்கள் - சிற்றிலக்கியங்கள் - புராணங்கள் பற்றிய ஆய்வுகள் - பக்தி இயக்கம் - சைவம், வைணவம் - சமுதாயச் சார்பு - அனுபூதியியம் (Mysticism) - உருவக் கூறுகள் - உத்திகள் - இரட்டைக் காப்பியங்கள் - சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வுகள் - கம்பராமயணம் பற்றிய ஆய்வுகள் - பிற

காப்பியங்கள் - சிற்றிலக்கியங்கள் - வடிவங்கள் - தலபுராணங்கள் - வடிவமும் அமைப்பும் - புதிய தமிழ் இலக்கியங்களும் ஆய்வுகளும் - புதினம் - மரபு வழிப்பட்ட புதிய கவிதை - சிறுகதை - நாடகம் - புதுக்கவிதை - இவை எதிர்கொள்ளப் பெற்ற முறை - புனைவிலி எழுத்துகள் (Non - Fiction) - இவை பற்றிய ஆய்வுப் போக்குகள் - இந்தியாவின் பிற மாநிலங்கள், இலங்கை மாநாடுகளில் நிகழ்ந்த தமிழாய்வுகள் - இலக்கண ஆய்வு (எழுத்து - சொல்) - தொல்காப்பிய எழுத்து, சொல்லிலக்கண ஆய்வுகள் - பிற இலக்கணங்கள் பற்றிய ஆய்வுகள் - சொல் வகைகள் குறித்த ஆய்வுகள் - உரையாசிரியர்களின் நோக்கு - மரபு வழி நோக்கும் மொழியியல் நோக்கும்.

## குறியிலக்குகள் (Objectives)

1. இலக்கிய இலக்கண ஆய்வுப் போக்குகளை அறிந்து கொள்வர்.
2. பன்முக நோக்கில் சங்க இலக்கியங்கள் குறித்து எழுந்த ஆய்வுகளைக் கற்றுணர்வர்.
3. செவ்வியல் இலக்கியங்களில் காணலாகும் செவ்வியல் கூறுகளை ஆராயும் திறனைப் பெறுவர்.
4. நடையியல், கட்டமைப்பு, மார்க்சியம், காந்தியம், பெரியாரியம், பெண்ணியம், தலித்தியம், போன்ற இசங்கள், இயக்கங்கள் குறித்து எழுந்த தமிழ் இலக்கிய ஆய்வுகளைக் கற்று, ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.
5. தமிழ் இலக்கியங்கள் இயம்பும் கருத்துகளைக் காலப் பின்னணியில் ஆராயும் திறனைப் பெறுவர்.
6. சமயக் கொள்கைகளின் தாக்கங்களைப் பக்தி இலக்கியங்களின் வழி ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.
7. காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள் பற்றிய ஆய்வுகளைக் கற்றுணர்வர்; இவ்விலக்கியங்களின் வடிவம், அமைப்புகளை ஆராய்ந்து அறியும் திறன் பெறுவர்.
8. புதிய தமிழிலக்கிய ஆய்வுகளின் போக்குகளை அறிந்து கொள்வர்.
9. தமிழ் மாநாடுகளில் நிகழ்ந்த தமிழாய்வுகள் குறித்துக் கற்றுணர்வர்.
10. தமிழ் இலக்கண ஆய்வுகளைக் கற்றறிவர்; மொழியியலோடு ஒப்பு நோக்கி அறியும் ஆற்றலைப் பெறுவர்.

## பயிற்றுமுறை

- ஆய்வியல் நெறிமுறைகளின் விளக்கமும் அவைகளின் பயன்பாடும் குறித்து எடுத்துரைக்க வேண்டும்.
- இலக்கிய ஆய்வில் அறிவியல் நெறியின் தேவையும் பயன்பாடும் குறித்து விளக்க வேண்டும்.
- ஆய்வாளரின் சிந்தனை ஆற்றலை வளர்ப்பதுடன் அவரின் ஆய்பொருளை வகுத்தும் தொகுத்தும் காணும் பார்வையை அவர் பெறும் வண்ணம் கற்பித்தல் வேண்டும்.
- ஆராய்ச்சியை வகை தொகை அறிவியல் (Classificatory Science) அடிப்படையில் விளக்க வேண்டும்.
- ஆய்வாளர்கள் திரட்டிய தரவுகளை விளக்கம் பெற்ற தெளிவான கோட்பாடுகளின் அடிப்படையில் வகுத்தும் தொகுத்தும் கொடுக்கும் படி எடுத்துரைக்க வேண்டும்.
- ஐரோப்பியர் வருகையால் தமிழாராய்ச்சியில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஆராய்ச்சிப் போக்குகளையும் விளக்குதல் வேண்டும்.
- இலக்கியம், இலக்கணம், மொழி, பண்பாட்டில் எழுந்த புதுமையான ஆய்வுகளை இனங்காணுதல் வேண்டும்.

**பார்வை நூல்கள்**


1. அமிர்தலிங்கம் சு. **சங்க இலக்கியக் களஞ்சியம்,** சிதம்பரம் : மெய்யப்பன் தமிழாய்வகம்.
2. அருணாசலம் க. **இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்,** சென்னை : குமரன் புத்தக நிலையம்.
3. அருணாசலம் மு. **நூல்கள்இலக்கிய வரலாற்றுத் தொகுதிகள்.**
4. **கம்பன் ஆய்வடங்கல்.**
5. காசிராசன் இரா. **சிலப்பதிகார ஆய்வடங்கல்.**
6. கிருஷ்ணமூர்த்தி கோ., வீரப்பன் பா. 1977. **நூல்கள் தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு.**
7. சண்முகம்பிள்ளை மு. 1982. **சிற்றிலக்கிய வகைகள்,** சிதம்பரம் : மணிவாசகர் நூலகம்.
8. சுப்பிரமணியன் ஏ.வி. 2000. **தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி,** சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.
9. செயராமன் ந.வீ. **சிற்றிலக்கியச் செல்வம்,** சிதம்பரம் : மணிவாசகர் நூலகம்.
10. தமிழண்ணல் (பதி.), **தமிழாய்வு,** மதுரை : மதுரைப்பல்கலைக்கழகம்.
11. தமிழண்ணல், இலக்குமணன் மா. **ஆய்வியல் அறிமுகம்.**
12. பகவதி கு., ஜீன் லாரன்ஸ் செ. **நூல்கள் தாய்நாட்டிலும் மேலை நாடுகளிலும் தமிழியல் ஆய்வு,** சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
13. பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்கள், **தமிழ் ஆராய்ச்சி வரலாறு,** தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி.
14. பாலசுப்பிரமணியம் கு.வெ. **ஆய்வியல் நெறிகள்.**
15. பாலசுப்பிரமணியம் கு.வெ. **ஆய்வுக்களங்கள்.**
16. முத்துசண்முகம், வேங்கடராமன் சு. **நூல்கள் ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை.**
17. வேங்கடசாமி மயிலை சீனி. **நூல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,** சிதம்பரம் : மணிவாசகர் பதிப்பகம்.
18. லூர்து தே. **நூல்கள் நாட்டார் வழக்காற்றியலில் கள ஆய்வு.**
19. Dissertations on Tamilology, Chennai: **International Institute of Tamil Studies**.
20. K. Meenakshi Sundaram, **Contribution of European Scholars to Tamil**, Chennai: University of Madras.


**இணையதள முகவரிகள்**

1. www. tamilvu.org
2. www. sirukathaikal.com
3. www. noolulagam.com
4. www. katuraitamilblogspot.com

## Course Outcomes

1. Explain Research Definition and Research methodology
2. Get research knowledge to find solutions for research problems.
3. Illustrate the position of the research Hyphoyhesis and the fundamentals of Hypothesis
4. Demonstrate comparative research method, comparative literature research method, Psychological research method, Scientific research, Specialization of Scientific research, Experimental method and its qualities.
5. Know the method of arranging-Bases for selecting the date, Gathering data, Systemizing gathered date.
6. Define Library, History of Library, Usages of Library, Usages of electronics and their necessity for research.
7. Get the power of the tacics of Interviews usages and classification in clear way.
8. Classify the history of Tamil Research and Research of Literature and Grammar.

# தாள் 2. இலக்கியக் கோட்பாடுகள்
# Literary Theories
# (22MPTAM2)

**நோக்கம்**

- தமிழ் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகளை விளக்குதல்.
- இலக்கிய இயக்கங்களை (Literary Movements) இயம்புதல்.
- மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை விவரித்தல்.
- நவீன இலக்கிய இசங்களையும் அண்மைக்காலப் போக்குகளையும் விளம்புதல்.
- தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளை, உலக இலக்கியக் கொள்கைகளை, கோட்பாடுகளை அறிமுகம் செய்தல்.

**பாடத்திட்ட அமைப்பு**

- தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், மேலை நாட்டு நவீன இலக்கியக் கோட்பாடுகள் அடிப்படையில் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அலகு 1.** தமிழும் இலக்கிய வகைக் கோட்பாடும்: இலக்கியவகைக் கோட்பாடு - இலக்கிய வகைச் சிந்தனை - அடிப்படை இலக்கிய வகைகள் - தமிழில் இலக்கிய வகை வளர்ச்சி - இலக்கிய வகை ஒப்பீடு.

**குறியிலக்குகள் (Objectives)**

1. இலக்கியங்களின் புற அமைப்பையும் அக அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு இலக்கியப் படைப்புகளை வகை செய்யும் இலக்கிய வகைமை முறையினை அறிந்து கொள்வர்.
2. இலக்கிய வகை ஆய்வின் சிறப்பியல்புகளையும் கூர்தலறக் கோட்பாட்டினையும் கற்றுணர்வர்.
3. தொல்காப்பியர் கூறும் இலக்கியத்தை வகைமைப்படுத்தும் நெறிகளைக் கற்றறிவர்.
4. ஆய்வுத்துறையில் வகைமைத் திறனாய்வு முறையினைப் பற்றி விளங்கிக் கொள்வர்.
5. தமிழில் இலக்கிய வகை வளர்ச்சியையும் இலக்கிய வகை ஒப்பீட்டு முறையினையும் ஆராய்ந்தறிவர்.

**அலகு 2.** தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள் : முன்னம் - மரபு - உவமை - உள்ளுறை - இறைச்சி - மெய்ப்பாடு - வண்ணம் - நோக்கு - வனப்பு - யாப்பு - திணைக் கோட்பாடு : திணை விளக்கம் - முப்பொருள் - அகத்திணைக் கோட்பாடு - களவு, கற்புக் கோட்பாடுகள் - புறத்திணைக் கோட்பாடு - தொல்காப்பியக் கவிதையியல் - இலக்கியப் பாடுபொருளும் தொல்காப்பிய அணுகுமுறையும்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. இலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் காலமுறை, பொருண்மைமுறை அடிப்படையில் விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதை உணர்வர்.
2. திணை இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியர் தரும் அகத்திணை, புறத்திணைக் கோட்பாடுகளைக் கற்றறிவர்.
3. தொல்காப்பியர் கூறும் பாவியல் கோட்பாடுகள், புனைவுமுறைக் கோட்பாடுகள், உவமை அல்லது அணிக் கோட்பாடுகள் முதலானவற்றை அறிந்து கொள்வர்.

4. உள்ளுறை, இறைச்சிக்குத் தொல்காப்பியர் கூறும் வரையறைகளைக் கற்றுணர்வர்.
5. இலக்கியப் பாடுபொருளையும் தொல்காப்பிய அணுகுமுறையினையும் கற்றறிவர்.

**அலகு 3.** நவீன இலக்கியக் கொள்கைகள் : வடிவங்கள் - மேலைத்தாக்கம் - காலனியம் - மக்களாட்சி மையப்பாடு - பழமையோடு முரணுதல் - இந்திய தேசிய இயக்கம் - காந்தியம் - பொதுவுடைமை இயக்கம் - மார்க்சியம் - திராவிட இயக்கம் - பெரியாரியம் - தனித்தமிழியக்கம் - இலக்கியத்தின் சமுதாயக் கொள்கை - இலக்கியத்தூய்மை வாதம் - அழகியற் கொள்கை - திறனாய்வுப் போக்குகள்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. நவீன இலக்கியக் கொள்கைகளைக் கற்றுணர்வதுடன் நவீனத்துவச் சிந்தனைகள் பழமையோடு முரணுதலுக்கான தன்மையை அறிந்து கொள்வர்.
2. தமிழியக்கத்தை நவீனத்துவத்தை நோக்கி நகர்த்தியதற்கான காரணிகளையும் தமிழில் நவீனத்துவம் படைப்புத் துறையிலும் திறனாய்வுத்துறையிலும் செல்வாக்குப் பெற்றதற்கான காரணங்களையும் ஆய்ந்தறிவர்.
3. இலக்கியங்களில் இந்திய தேசிய இயக்கங்களின் தாக்கத்தினைத் திறனாய்ந்தறிவர்.
4. திராவிட இயக்கச் சிந்தனைகள், பொதுவுடைமை இயக்கக் கருத்துகள், பெரியாரிய இதழ்கள், இலக்கியங்கள் வாயிலாக ஏற்படுத்திய தாக்கங்களைக் கற்றுணர்வர்.
5. தமிழ்மொழியை முன்னிலைப்படுத்தித் தமிழர் ஒருமைப்பாட்டினையும் தமிழின் தனித்துவத்தையும் எடுத்தியம்பிய தனித்தமிழியக்கச் சிந்தனைகளையும் இலக்கியத் தூய்மைக் கொள்கையினையும் கற்றறிவர்.

**அலகு 4.** தமிழில் தாக்கம் ஏற்படுத்திய சில கலை இலக்கிய இயக்கங்கள் : சிற்றறிதழ்கள் - செவ்வியல் (Classcism) - புனைவியம் (Romanticism) - நடப்பியம் (Realism) - இயற்பண்பியம் (Naturalism) - குறியீட்டியம் (Symbolism) - படிமவியம் (Imagism) - உருவவியம் (Formalism) - உளப்பகுப்பாய்வு (Psycho Analysis) - மிகை நடப்பியல் (Surrealism) - இருத்தலியம் (Existentialism) - முருகியல் (Aestheticism) - வெளிப்பாட்டியல் (Expressionism).

**குறியிலக்குகள் (Objectives)**

1. தமிழில் தாக்கம் ஏற்படுத்திய இலக்கிய இயக்கங்களைக் கற்றுணர்வர்.
2. தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளையும் உலக இலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அறிமுகப்படுத்திய சிற்றிதழ்களை அறிந்து கொள்வர்.
3. இலக்கியத்தின் வடிவம், உணர்ச்சி, சுவை, அழகுகள், உத்திகள் முதலானவற்றிற்கு முக்கியத்துவம் நல்கும் ‘உருவவியம்’ குறித்துக் கற்றுணர்வர்.
4. இலக்கிய இயக்கியங்களைக் கற்றுணர்ந்து அவற்றை இலக்கியங்களில் ஆராய்ந்து அறியும் ஆற்றலைப் பெறுவர்.
5. இலக்கியத்தையும் உளவியலையும் திறனாய்வு அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.

**அலகு 5.** அமைப்பியல் (Structuralism) - பின் அமைப்பியல் (Post Structuralism) - நவீனவியம் (Modernism) - பின் நவீனவியம் (Post Modernism) - பின் காலனியம் (Post Colonialism) - சிறுபான்மையினச் சொல்லாடல் (Minority Discourse) - மாயாசால நடப்பியல் (Magical Realism) - பெண்ணியம் (Feminism) - தலித்தியம் (Dalitism) - அண்மைப்போக்குகள்.

## குறியிலக்குகள் (Objectives)

1. **மொழி அமைப்பைக் கண்டறிவது போல் இலக்கியத்தின் உள்கட்டமைப்பைக் காணும் அமைப்பியல் திறனாய்வினைக் கற்றுணர்வர்.**
2. **இலக்கியம், அரசியல், மனித வாழ்க்கை முறை முதலானவற்றில் பழமையிலிருந்து மாறுபட்டு புதுமையை நோக்கி நகர்ந்து செல்லும் நவீனத்துவம் குறித்து அறிந்து கொள்வர்.**
3. **பின்நவீனத்துவம், பின் அமைப்பியல் கோட்பாடுகளைப் பண்பாட்டுக் களத்துக்கு நீட்டித்து ஆராயும் ஆற்றலைப் பெறுவர்.**
4. **ஆதிக்கத்தை எதிர்த்தும் கொள்கை ரீதியான கட்டமைப்புகளை உருவாக்குவதில் அக்கறை செலுத்தும் பின்காலனியம் பற்றித் தெரிந்து கொள்வர்.**
5. **சமூக ஒடுக்குதலுக்கும் ஒதுக்குதலுக்கும் அரசியல், பண்படுத் தளத்தில் கருத்தியல் தாக்கத்தினை ஏற்படுத்திய 'தலித்தியம்' பற்றியும் பெண்களின் உரிமைக்காகப் போராடும் 'பெண்ணியம்' குறித்தும் விளங்கிக் கொள்வர்.**

## பயிற்றுமுறை

- தமிழ் இலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்குதல் வேண்டும்.
- இலக்கிய வகை ஆய்வின் சிறப்பியல்புகளை மொழிதல் வேண்டும்.
- தமிழில் இலக்கிய வகை வளர்ச்சியையும் இலக்கிய வகை ஒப்பீட்டு முறையினையும் ஆய்வு நோக்கில் விளக்குதல் வேண்டும்.
- இலக்கியக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் காலமுறை, பொருண்மைமுறை அடிப்படையில் உணர்த்துதல் வேண்டும்.
- தமிழிலக்கியத்தை நவீனத்துவத்தை நோக்கி நகர்த்தியதற்கான காரணிகளையும் தமிழில் நவீனத்துவம் படைப்புத் துறையிலும் திறனாய்வுத்துறையிலும் செல்வாக்குப் பெற்றதற்கான காரணங்களையும் பகர்தல் வேண்டும்.
- இலக்கிய இயக்கங்களைத் (Literary Movements) தோற்றப் பின்புலத்துடன் இயம்புதல்.
- மேலைநாட்டு இலக்கியக் கோட்பாடுகளை விவரித்தல் வேண்டும்.
- நவீன இலக்கிய இசங்களையும் அண்மைக்காலப் போக்குகளையும் விளம்புதல் வேண்டும்.
- தமிழ்ச் சூழலில் புதிய அணுகுமுறைகளை, உலக இலக்கியக் கொள்கைகளை, கோட்பாடுகளை அறிமுகம் செய்தல்.
- நவீனத்துவக் கருத்தாக்கங்களின் பின்னடைவுகளை இயம்புதல் வேண்டும்.

## பார்வை நூல்கள்


1. **முத்துச்சண்முகம்** 2014. **தமிழ் இலக்கியக் கோட்பாடுகள், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.**
2. **ஜீன் லாரன்ஸ் செ., பகவதி கு.** (ப.ஆ.) 1998. **தொல்காப்பிய இலக்கியக் கோட்பாடுகள், சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.**
3. **கார்த்திகேசு சிவத்தம்பி** 2012. **தொல்காப்பியமும் கவிதையும், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.**
4. **இளமாறன் பா.** (ப.ஆ.) 2008. **தொல்காப்பியம் பன்முக வாசிப்பு, சென்னை : மாற்று.**
5. **தமிழண்ணல்** 2005. **சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கிய வகைகள், மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.**
6. **தமிழண்ணல்** 2011. **சங்க இலக்கிய ஒப்பீடு இலக்கியக் கொள்கைகள், மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.**
7. **பிச்சமுத்து ந.** 2006. **திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும், சென்னை : சக்தி வெளியீடு.**

8. நடராசன் தி.சு. 2012. திறனாய்வுக் கலை, சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. சிவகுமார் ஐ. 2011. செவ்வியல் இலக்கிய ஆய்வுகள் செந்தமிழ் இதழ்க் கட்டுரைகள் (1902-1935), சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. இராமநாதன் ஆறு. (ப.ஆ.), 2003. நாட்டுப்புறவியல் களஆய்வு நெறிமுறைகள், திருவனந்தபுரம் : தென்னிந்திய மொழிகளின் நாட்டுப்புறவியல் கழகம்.
11. ஆலிஸ் அ. (ப.ஆ.), 2009. பிறமொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்களின் தாக்கம், திருச்சிராப்பள்ளி : பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
12. பிச்சமுத்து ந. 2006. இலக்கிய இயக்கங்கள், சென்னை : சக்தி வெளியீடு.
13. இ.எஸ்.டி. (தொ.ஆ.), 2006. இலக்கிய இஸங்கள், தஞ்சாவூர் : அகரம்.
14. தமிழவன், 2008. அமைப்பியலும் அதன் பிறகும், திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
15. சாரதாம்பாள் செ. 2017. இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
16. பூரணச்சந்திரன் க. 2009. அமைப்பியமும் பின் அமைப்பியமும், திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
17. அழகரசன் (தமிழில்), 2008. கேதரின் பெல்ஸி பின் அமைப்பியல், திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
18. மங்கை அ. (தமிழில்), 2017. ராபர்ட் ஜே.சி. யங் பின்காலனியம், திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
19. சுரேஷ் எம்.ஜி. 2009. பின் நவீனத்துவம் என்றால் என்ன?, திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
20. ஜிம் பவல், 2014. பின்நவீனத்துவம் தொடக்க நிலையினருக்கு, திருச்சிராப்பள்ளி : அடையாளம்.
21. சுப்பையா அரங்க. 2014. இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள், சென்னை : பாவை பப்ளிகேஷன்ஸ்.

### இணையதள முகவரிகள்

1. www. tamilvu.org
2. www. sirukathaikal.com
3. www. noolulagam.com
4. www. katuraitamilblogspot.com

## Course Outcomes

1. Regregate Literature on the basis of inner and outer structure of the literature.
2. Understand the growth of Tamil Literary distribution and comparative literary method.
3. Explain the time method and subject method literary principles and theories.
4. Learn the literary themes and approaches of Tholkappiam.
5. Understand the factors that move: Tamil literary movement towards modernism and the reasons for modernism to get favourism in creativity and criticism in Tamil.
6. Learn the Literary movement which gives impact in Tamil.
7. Get the power of applying literary movement in literature.
8. Get the skill to explain Dalitism which proves opinion wise impact on oppressive and suppressive.

# தாள் : 3. நோக்குநூற் பயன்பாடு

Usage of Reference works

**(22MPTAM3)**

**நோக்கம்**

- நோக்கு நூல்கள் (Reference Books) பயன்பாட்டின் இன்றியமையாமையை உணர்த்துதல்.
- நிகண்டுகள், அகராதிகள், களஞ்சியங்கள், சொல்லடைவு போன்றவற்றைக் கையாளும் முறைமையைப் பயிற்றல்.
- மொழியையும் இலக்கியத்தையும் கற்பதற்கும் ஆய்வதற்கும் நோக்குநூல்கள் துணை நிற்றலைப் புலப்படுத்துதல்.
- காலந்தோறும் மொழிக்கூறுகள் சொல்லும் பொருளும் மாற்றமடைதலை உணர்த்துதல்.
- நோக்குநூல்களில் இடம்பெறும் கற்றல் கூறுகளைக் கற்பித்தல்.

**பாடத்திட்ட அமைப்பு**

- நோக்குநூல் வகைமை அடிப்படையில் அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**அலகு *1.*** நோக்கு நூல்கள் (Reference Books) **:** நோக்குநூல் - விளக்கம் - தமிழில் தொல்காப்பிய உரியியல் - நிகண்டுகள் - வகைகள் - செய்யுள் முதனினைப்பு முதலியன - தமிழக மரபுவழிக் கல்வியில் இவற்றின் இடம் - பயன்பாடு - ஐரோப்பியத் தாக்கம் - தமிழில் அகராதி முதலியவற்றின் தோற்றம் - வரலாற்றுப்போக்கு - தேவை.

**குறியிலக்குகள் (Objectives)**

1. நோக்குநூல்களின் பயன்பாட்டினை அறிந்து கொள்வர்.
2. தொல்காப்பியத்தில் நிகண்டு, அகராதி முதலிய நோக்கு நூல்களுக்கான கூறுகள் பொதிந்துள்ளமையைக் கற்றறிவர்.
3. தமிழக மரபுவழிக் கல்வியில் நிகண்டுகளின் பயன்பாட்டுத் தன்மையையும் சொல்லுக்கு நூற்பா வடிவில் பொருள் தருதலின் இன்றியமையாமையையும் விளங்கிக் கொள்வர்.
4. நோக்குநூல்களில் பொருள் விளக்கப் பயன்படுத்தப்படும் உத்திமுறைகளைக் கற்றுணர்வர்.
5. நோக்குநூற் பயன்பாட்டில் ஐரோப்பியத் தாக்கத்தையும் அகராதி முதலியவற்றின் தோற்றம் மற்றும் வரலாற்றுப் போக்கையும் இன்றைய தேவைகளையும் அறிந்து கொள்வர்.

**அலகு 2.** அகராதி (Dictionary) **:** அகராதி விளக்கம் - வகைகள் - ஒருமொழி - இருமொழி - பன்மொழி - அகராதிகள் - சிறப்பகராதிகள் - ஒரு பொருளுடைச் சொற்களஞ்சியம் (Thesaurus) - பேரகராதி (Lexicon) - அகராதிப் பதிவுக் கூறுகள் - தமிழில் அகராதிகள்.

**குறியிலக்குகள் (Objectives)**

1. அகராதி உருவாக்கத்திற்கும் சொற்பொருள் கூறும் துறை தனியே உருவாவதற்கும் காரணமாகத் தொல்காப்பியம் விளங்கியதை அறிந்து கொள்வர்.
2. அகராதிகளில் கலைச்சொல் பதிவு பொருள், விளக்கத்திற்குக் கையாளப்பெறும் உத்திகள் முதலியவற்றைக் கற்றறிவர்.
3. ஒரு மொழி அகராதி, இருமொழி அகராதி, பன்மொழி அகராதி, பேரகராதி முதலியவற்றின் அமைப்பையும் அவற்றின் வளர்ச்சிப் போக்கையும் கற்றறிவர்.
4. ஒரு பொருளுடைச் சொற்களஞ்சியத்தின் (Thesaurus) அமைப்பையும் அகராதியிலிருந்து வேறுபடும் திறத்தையும் கற்றுணர்வர்.

**அலகு 3. சொற்**களஞ்சியம் (Glossary) - பொருட்களஞ்சியம் (Compendium) - கலைக்களஞ்சியம் (Encyclopaedia) - பதிவுக் கூறுகள் - குறுக்கு நோக்கீடு - தமிழில் களஞ்சியம்.

## குறியிலக்குகள் (Objectives)

1. நோக்குநூல்களில் களஞ்சியங்களின் இன்றியமையாமையைப் புரிந்து கொள்வர்.
2. களஞ்சியங்களில் உள்ள தலைச்சொல்லையும் அது சார்ந்த விளக்கத்தையும் நோக்கி அறியும் திறனைப் பெறுவர்.
3. களஞ்சியங்கள் அகராதியிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை என்பதையும் சொற்களஞ்சியம், பொருட்களஞ்சியம், கலைக்களஞ்சியம் ஆகியவற்றின் அமைப்பையும் அவற்றின் வளர்ச்சிப் போக்குகளையும் கற்றுணர்வர்.
4. களஞ்சியங்களில் இடம்பெற்றுள்ள பதிவுக்கூறுகளையும் குறுக்கு நோக்குகளையும் அறிந்து கொள்வர்.
5. களஞ்சியங்கள் மூலம் பொதுஅறிவை வளர்த்துக் கொள்ள இயலும் என்பதை விளங்கிக் கொள்வர்.

**அலகு 4. சொல்லடைவு : சொல்லடைவு - பொருளடைவு - தொடரடைவு - அடைவு வகைகள் - பல்வகை முதற்குறிப்புகள் இவை நூல்களாகவும், நூல்களின் இணைப்புகளாகவும் ஆக்கம் பெறுதல்.**

## குறியிலக்குகள் (Objectives)

1. சொல்லடைவுகளின் அமைப்பும் வகைகளும் பற்றி அறிந்து கொள்வர்.
2. சொல்லடைவுக்கு இன்றியமையாத 'தரவு' என்பதன் வரையரையைக் கற்றறிவர்.
3. சொல்லடைவுகளில் திரிபு வடிவங்களில் தெரிவு செய்யப்பெற்ற அடிப்படை வடிவமே (Cannonical form) கலைச்சொல்லாக அமையும் என்பதை ஆராய்ந்தறிவர்.
4. சொல்லடைவுகள் மூலம் குறிப்பிட்ட காலப் பகுதிக்குரிய மொழி அமைப்பை அறிந்து கொள்ள இயலும் என்பதை அறிவர்.
5. தொடரடைவு மூலம் ஒரு தனிச்சொல் இடம்பெறும் சொற்சூழலை அறிந்து கொள்வர்.

**அலகு 5.** நூலடைவு (Bibliography) - நூற்பட்டியல் (Catalogue) - யார்? எவர்? (Who is who / Biographical Index) - ஆண்டுப் பதிவு நூல்கள் (Year Lecous) - கையேடுகள் (Hand book) - விளக்க ஏடுகள் (Manuals) - அரசிதழ் (Gazettee) - முதலியன தமிழ் சார்ந்த வலை வழி (on - line) நோக்கு நூல்கள்.

## குறியிலக்குகள் (Objectives)

1. நூலடைவின் அமைப்பு, வைப்புமுறை முதலானவற்றைக் கற்றறிவர்.
2. நூற்பட்டியலின் இன்றியமையாமை, தொகுப்பு முறைமை ஆகியவற்றை அறிந்து கொள்வர்.
3. ஆண்டுப் பதிவு நூல்கள், விளக்க ஏடுகளின் கட்டமைப்பு மற்றும் பயன்பாட்டின் இன்றியமையாமையை விளங்கிக் கொள்வர்.
4. அரசிதழ்கள், காலாண்டு, அரையாண்டு, ஓராண்டு இதழ்களின் அமைப்பு, மொழிநடை, விமர்சன நோக்கு போன்றவற்றை ஆராய்ந்தறிவர்.
5. வலைதளங்கள் வழி நோக்கு நூல்களை ஆராய்ந்து கற்றல் திறனை வளர்த்துக் கொள்வர்.

## பயிற்றுமுறை

- நோக்கு நூல்களை இலக்கிய, இலக்கண நூல்களைப் போன்று கற்க வேண்டிய அவசியத்தை விளம்ப வேண்டும்.
- நோக்கு நூல்களின் அமைப்பு, பயன்பாட்டின் இன்றியமையாமை ஆகியவற்றை எடுத்துரைத்தல் வேண்டும்.

- நோக்கு நூல்களின் வகைகளையும் அவற்றிற்கு இடையே உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளையும் விளக்குதல் வேண்டும்.
- நிகண்டுகள், அகராதிகள், களஞ்சியங்கள், சொல்லடைவுகள் போன்றவற்றில் இடம் பெற்றுள்ள கற்றல் கூறுகளை இயம்புதல் வேண்டும்.
- சொற்கள் எத்தனைப் பொருள்களைக் கொண்டுள்ளன; அவற்றின் இடையே உள்ள தொடர்பு ஆகியவற்றை சொற்களஞ்சியத்தின் (Thesaurus) மூலம் விளக்குதல் வேண்டும்.

### பார்வை நூல்கள்


1. சண்முகம் பிள்ளை மு. **நிகண்டு சொற்பொருட்கோவை தெய்வப்பெயர்,** மதுரை : மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
2. சற்குணம் மா. 2002. **தமிழ் நிகண்டுகள் ஆய்வு,** சென்னை : இளவழகன் பதிப்பகம்.
3. சித்திரபுத்திரன் எச். 1994. **அகராதியியல் கையேடு** (கணிப்பொறி அச்சு) அகராதியியல் துறை, தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
4. சாமி பி.எல். (மு.ப.), 1991. **அறிவியல் களஞ்சியம்,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கவலைக்கழகம்.
5. சித்திரபுத்திரன் எச். 2002. **தமிழ் அகராதியியல்,** தஞ்சாவூர் : அனன்யா.
6. சித்திரபுத்திரன் எச். 2004. **சொல்லும் பொருளும்,** தஞ்சாவூர் : அன்னம்.
7. சிங்காரவேலு முதலியார் ஆ. 1985. **அபிதான கோசம்,** புதுதில்லி : ஏசியன் எஜூகேஷனல் சர்வீசஸ்.
8. சுந்தரமூர்த்தி இ. 2001. **தமிழியல் ஆய்வு மேம்பாடு,** சென்னை : சென்னைப் பல்கலைக் கழகம்.
9. சுந்தர சண்முகனார். 1968. **தமிழ் அகராதிக்கலை,** புதுவை : பைந்தமிழ்ப் பதிப்பகம்.
10. பன்னிருகைவடிவேலன் இரா. 2014. **நோக்குநூல்கள் மரபும் புதுமையும்,** சென்னை : தமிழாய்வு மன்றம்.
11. பாலுசாமி நா. (ப.ஆ.), 1991. **வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 1,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
12. பெரியசாமி தூரன் மா.ப. (ப.ஆ.), 1954. **கலைக்களஞ்சியம், தொகுதி ஒன்று,** சென்னை : தமிழ் வளர்ச்சிக் கழகம்.
13. மாதையன் பெ. 2005. **தமிழ் நிகண்டுகள் வரலாற்றுப் பார்வை உருவ உள்ளடக்க ஆய்வு,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
14. மாதையன் பெ. 1997. **அகராதியியல்,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக் கழகம்.
15. முத்தம்பிப் பிள்ளை ஏ. 1985. **அபிதான கோசம்,** புதுதில்லி : ஏசியன் எஜூகேஷனல் சர்வீஸ்.
16. மூர்த்தி து. 1983. **கலைக்களஞ்சிய உருவாக்கம் சில அடிப்படைக்குறிப்புகள் மொழியியல்** 6, அண்ணாமலை நகர் : அனைத்திந்திய மொழியியற் கழகம்.
17. ராசேந்திரன் ச. 2002. **தமிழ்ச் சொற்களஞ்சியம்,** தஞ்சாவூர் : தமிழ்ப் பல்கலைக்கழகம்.
18. வீராசாமி தா.வே. 1989. **அகராதிக்கலை,** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.
19. ஜெயதேவன் வ. 1977. **தமிழ் அகராதியியல்,** சென்னை : அன்பு நூலகம்.
20. ஜெயதேவன் வ. 1985. **தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு,** சென்னை : ஐந்திணைப் பதிப்பகம்.
21. Zgusta, Ladislav. 1971. **Manual of Lexicography**, Mouton, The Hague , New York.
22. Sing R.A. 1982. **An Introduction to Lexicography**, Mysore : Central Institute of Indian Languages.


### இணையதள முகவரிகள்

1. www. tamilvu.org
2. www. sirukathaikal.com

3. www. noolulagam.com
4. www. katuraitamilblogspot.com

## Course Outcomes

1. Illustrate the usages of reference works
2. Understand the impact of Europe, the birth of Dictionary and Histroical flow and now-a-days needs in the usage of reference works.
3. Know that Tholkaapiyam plays a vital role for the creation of Dictionary and for the evaluation of separate department to give meaning of the words.
4. Learn the structure and the way of development in single language dictionary, two languages Dictionary, multi language Dictionary, Grant Dictionary.
5. Observe by learning that Encyclopedia are different from Dictionary,whereas Encyclopaedia of words, meaning and Arts and their structure and the way of development.
6. Identify the structure and types of words.
7. Infer the structure of storage of books, placing method, year wise registers, Structure of explaining books and the necessity of their usages.
8. Enrich the learning capacity by getting references through Internet.